<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 8/2024 | சாட்சியம் | : | **WW1** |
| **Name** | : | திரு.முத்து | | | |
| **Date** | : | **15.05.2026** | | | |
| **Time** | : | **10.56 a.m to 11.07 a.m** | | | |

<u>தொ.த.சா.1.திரு.முத்து என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

29.09.2021 தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை எனக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். 04.10.2021 தேதியிட்ட பதில் கொடுத்தேன் என்றால் ஆமாம். அதன் பிறகு உள்துறை விசாரணை நடைபெற்றது என்றால் ஆமாம். அதில் நான் கலந்து கொண்டேன் என்றால் ஆமாம். அதில் எனக்கு சக தொழிலாளியை உதவிக்கு வைத்துக் கொள்ள அனுமதித்தார்களா என்றால் நான் கேட்ட தொழிலாளியை அனுமதிக்கவில்லை வேறு தொழிலாளியை தான் அனுமதித்தார்கள். இந்த விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூல சாட்சியத்தில் சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. விசாரணையின் போது சொன்னேன். விசாரணை குறிப்பில் நான் கேட்ட தொழிலாளி எனக்கு

அனுமதிக்கப்படவில்லை என்ற விவரம் எழுதப்பட்டுள்ளதா? என்றால் நான் விசாரணை அதிகாரியிடம் தெரிவித்தேன் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. என்னுடைய மனுவில் நான் கேட்ட சக தொழிலாளியை எனக்கு அனுமதிக்கவில்லை என்ற விவரத்தை சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. நான் கேட்ட சக தொழிலாளியே எனக்கு அனுமதிக்கவில்லை என வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மதுரம் பிராப்பர்ட்டீஸ் ப்ரோமோட்டர்ஸ் என்ற கம்பெனியின் பைனான்ஸ் ஏஜென்டாக என் மனைவி இருப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். விசாரணையின் போது என் மனைவி சாட்சியாக விசாரிக்கப்பட்டாரா என்றால் இல்லை. விசாரணையின் போது குறுக்கு விசாரணை செய்ய எனக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. விசாரணை குறிப்பில் எனக்கு கேள்வி கேட்க எதுவும் இல்லை என நான் சொன்னதாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. அந்த விசாரணை குறிப்பை படிப்பதற்கு எனக்கு அவகாசம் கொடுக்கவில்லை அது படிக்கும் நிலையிலும் இல்லை. விசாரணை நடவடிக்கை குறிப்புகளின் நகல் எனக்கு வழங்கப்பட்டதா என்றால் இல்லை. 31.01.2022 தேதியிட்ட பதில் கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த பதிலில் எனக்கு நகல் வழங்கப்படவில்லை என சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. மனுவிலோ சாட்சியத்திலோ விசாரணை நடவடிக்கை குறிப்பு நகல் எனக்கு

வழங்கப்படவில்லை என்பதை சொல்லி உள்ளேனா என்றால் இல்லை அவ்வாறு சொல்ல வேண்டும் என்பது பற்றி எனக்கு தெரியாது. வழக்கறிஞரின் உதவியுடன் தான் மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். விசாரணை நடவடிக்கை குறிப்பு நகல் வழங்கப்படவில்லை என வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உள்துறை விசாரணை முறையாக நடைபெற்றது என்றாலும் வழக்கிற்காக முறையாக நடைபெறவில்லை என சொல்கிறேன் என்றாலும் சரி அல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:15.05.2026.